பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல; 021 - 3081

# பூதத்தம்பி

(இசை நாடகம்)

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை

நடிகமணி வி. வி. வைரமுத்து
அவர்களின் துணைவி
திருமதி இரத்தினம் அம்மையார்
நினைவு வெளியீடு

11-09-2000

# பூதத்தம்பி

(இசை நாடகம்)

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை

*நடிகமணி வி. வி. வைரமுத்து*

அவர்களின் துணைவி

**திருமதி இரத்தினம் அம்மையார்**

**நினைவு வெளியீடு**

11-09-2000

# பதிப்புரை

காங்கேசன்துறை 'வசந்தகானசபை' 1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ஆம் திகதி, ஈழத்துப் பிரபலமான முதுபெரும் எழுத்தாளர் இலங்கையர்கோன் தலைமையில் நிறுவப்பட்டது. நடிக மணி வி. வி. வைரமுத்துவை முதலாகக்கொண்ட பல கலைஞர்கள் இதன் உறுப்பினர்களாக விளங்கினர். வசாவிளான் ப. மார்க்கண்டு, கரவெட்டி வி. நற்குணம், பருத்தித்துறை ப. சின்னத்துரை ஆகியோர் முக்கியமான உறுப்பினர்களாக விளங்கினர்.

ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரை இச்சபையின் தாயாக இருந்து பலவகைகளிலும் உதவிசெய்து வந்தவர் எமது அம்மா திருமதி இரத்தினம் அம்மையார் அவர்கள். அவர்களுடைய மறைவு எங்கள் எல்லோருக்கும் சபைக்கும் ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும்.

அம்மாவின் மறைவையொட்டி நாம் ஒரு நினைவு மலரைப் பயனுடையதாக வெளியிட எண்ணினோம். அன்பர்கள் பலர் வசந்தகானசபை மேடையேற்றிய பூதத்தம்பி நாடகத்தை அல்லது மயானகாண்ட நாடகத்தை வெளியிடும்படி வேண்டினர். அதற்கு அமைய ஒரு மணித்தியாலம் நடிக்கக்கூடியதான பூதத்தம்பி இசை நாடகப் பிரதி (சொல்லுரு - Script) வெளியிடப்படுகிறது.

இப்பிரதியை, சபையின் வேண்டுகோளுக்கமைய பலவருடங்களுக்கு முன்னர் எழுதித்தந்தவர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை யாவர். எமது விருப்புக்கமைய அவரே இந்நாடகம் குறித்த ஒரு கண்ணோட்டத்தையும் எழுதி வழங்கியுள்ளார்கள். அவருக்கு எமது குடும்பத்தின் சார்பில் நன்றி கூறக் கடப்பாடுடையோம்.

இந்நினைவுமலரை அழகாக அச்சிட்டுதவிய பாரதி பதிப்பகத்தினருக்கும், குறிப்பாக அதன் உரிமையாளரும் எமது குடும்ப விளக்காகிய நடிகமணியின் நண்பருமாகிய 'சங்கர்' அவர்களுக்கும், அம்மாவின் இறுதிக்கிரிகைகளின்போது உதவிய / பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

**நடிகமணி வைரமுத்துவின்**
**குடும்பத்தினர்.**

[தற்காலிக விலாசம்:]
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

காங்கேசன்துறை.
11-09-2000

உ

சிவமயம்



தோற்றம்
05.11.1928

மறைவு
13.08.2000

## திருமதி இரத்தினம் வைரமுத்து
அவர்கள்

**திதி வெண்பா**

ஆண்டு விக்கிரமம் ஆவணி பூர்வபக்கப்
பூண்ட திரயோதசி பொற்திதியில் - ஈண்டு
இரத்தினம் வைரமுத்து எல்லாமே தான்துறந்து
பரமபதம் எய்தினார் பார்.

# பூதத்தம்பி நாடகம் ஒரு கண்ணோட்டம்

ஈழத்து நாடக வரலாற்றில் 'பூதத்தம்பி' நாடகத்துக்கென ஒரு தனியிடமுண்டு. இந்நாடகம் விலாசமாகவும், நாட்டுக் கூத்தாகவும், இசைநாடகமாகவும், சொல்லாடல் நாடகமாகவும் நடிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பூதத்தம்பி நாடகம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு வரலாற்று நாயகனின் கதையைக் கூறுவதனாலும் சிறப்பிடம் பெறுகிறது. ''கண்டியரசன் நாடகம்'' ''சங்கிலியன் நாடகம்'' எவ்வாறு ஈழத் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தனவோ அவ்வாறே இந் நாடகமும் தமிழ் மக்களது மனதைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

*இப்பிரதியின் வரலாறு*

பூதத்தம்பி நாடகம் முதன் முறையாக நடிகமணி வி. வி. வைரமுத்துவினால் இசை நாடகமாக 1966 ஆம் ஆண்டு ஆடி அமாவாசைக்கு முதல்நாள் காங்கேசன்துறையில் மேடையேற்றப் பட்டது. இவ்வரங்கேற்றம் வைரமுத்துவுக்கு அவ்வளவு வெற்றியளிக் கவில்லை. அதனால் சோர்வடைந்த வைரமுத்து இந்நாடகத்தைத் தொடர்ந்து மேடையேற்ற விரும்பவில்லை. இம்முடிவை மிகவும் கவலையுடன் அவர் எனக்குக் கூறிய போது நாடகத்தின் தோல்விக் குரிய காரணங்களை நான ஆராய்ந்தேன்.

பூதத்தம்பி நாடகத்தில் வைரமுத்து அந்திராசி வேடமேற்று நடித்தார். அந்திராசி ஒரு தீயவனாக, பிறன் மனைவியை விரும்பும் காமுகனாக, அவள் உடன்படாதபோது அவளையும் கணவனையும்

பழிவாங்கும் பாதகனாக இந்நாடகத்திற் சித்திரிக்கப்படுகின்றான். இதுவரை நல்ல பாத்திரமாக - ராஜபார்ட்டாக வைரமுத்துவைப் பார்த்த இரசிகர்கள், அவரை ஒரு தீயபாத்திரமாக - வில்லனாகப் பார்க்க விரும்பவில்லை. இதுவே நாடகத்தின் தோல்விக்குரிய காரணமாகும் எனும் உண்மை புலப்பட்டது.

இக்கருத்தை நான் கூறியபோது வசந்தகான சபை நடிகரும் பூதத்தம்பியாக நடித்தவருமான வி. நற்குணம், தான் 'அந்திராசி' பாத்திரம் ஏற்று நடிப்பதாகவும், வைரமுத்துவை 'பூதத்தம்பி' பாத்திரத்தை ஏற்று நடிக்கும்படியும் கேட்டுக்கொண்டார். அதற்கு நானும் வைரமுத்துவும் உடன்படவில்லை.

அந்திராசியை முழுக்க முழுக்கத் தீயபாத்திரமாகப் படைக்காமல் சந்தர்ப்ப சூழ்நிலையால் தீயவனாக மாறிய ஒருவனாக சித்திரித்துப் பார்ப்போமா? என்று நான் கேட்டபோது வைரமுத்து அதற்கு உடன்பட்டதோடு, அப்பணியைச் செய்யும்படி என்னையே கேட்டுக்கொண்டார். அதனால் எழுந்ததுதான் இந்நாடகப்பிரதியாகும். (சொல்லுரு)

'பூதத்தம்பி விலாசம்' பலரால் எழுதப்பட்டு நடிக்கப்பட்டு வந்துள்ளது. அவற்றுள் சு. க. கந்தையாபிள்ளை உபாத்தியார் எழுதிய பிரதியையே பலரும் பயன்படுத்தியுள்ளனர். தாவீதுகொஸ்தீன் என்பவர் எழுதிய 'பூதத்தம்பி' விலாசம் ஒன்றுமுள்ளது. காரைநகர்க் கலைஞர்கள் குருகேசையர் எழுதிய பிரதியையே பயன்படுத்தி வந்தனர். முருகேசையரே 'இருசகேத்திரன்' நாடகத்தையும் எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர பூதத்தம்பி நாடகம் நாட்டுக்கூத்தாகவும் (தென்மோடிக் கூத்தாகவும்) ஆடப்பட்டது.

சங்கரதாஸ் சுவாமிகள் ஈழத்துக்கு வந்தபோது பூதத்தம்பியின் வரலாற்றையும், கண்டியரசன் வரலாற்றையும் இசை நாடகங்களாக எழுதி மேடையேற வைத்தார். இந்நாடகங்கள் அனைத்திலும் அந்திராசி ஒரு கொடியவனாகவே சித்திரிக்கப்பட்டுள்ளான். பூதத்தம்பி இசைநாடகம் சுவாமி அவர்களால் 1901 ஆம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டதென்பர் கலையரசு சொர்ணலிங்கம்.

சுவாமியவர்கள்

அந்திராசி யெனும் தீயன் - பல
அக்கிரமம் செய்யும் பேயன்
நிந்தை மொழிகிற வாயன் - காமம்
நிரம்பி வழிகிற காயன்

என இவனை வருணிப்பார்.

நாட்டுக்கூத்து பின்வருமாறு பூதத்தம்பியை வருணிக்கக் காணலாம்.



நல்லூரான் பாதம் நாளும் மறவாத
நல்லவனைக் கொல்லலாமா?
புல்லரைக்கூட மதித்துத் தொழுகின்ற
புனிதனுக்கா இந்தக் கோலம்

சின்னொலாந்தேசு கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## பூதத்தம்பி நாடகக்கதை

ஒல்லாந்தர் ஆட்சியின்போது, யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பாக இருந்தவன் அட்மிறல் (அமிறால்) அந்தோனி என்பவன். இவனிடம் பூதத்தம்பி தொழில் வேண்டிச் செல்கிறான்.

யாழ்ப்பாணத்து உயர் வெள்ளான் சாதியில் பிறந்த பூதத்தம்பி கல்வி கேள்விகளிலும் சிறப்புடையவன். இவனுடைய தகுதியையும், ஆற்றலையும் அறிந்த அட்மிறல் அந்தோனி யாழ்ப்பாணப் பிரதம அமைச்சராகிய அந்திராசியின் உதவி அமைச்சராகப் பூதத்தம்பியை நியமிக்கிறான்.

பூதத்தம்பியின் மைத்துனனாகிய கைலாயபிள்ளையைக் கச்சாய்த்துறைக்கு வன்னிமையாக்குகின்றான்.

ஒரு நாள் முதலமைச்சர் அந்திராசியும், பூதத்தம்பியும் நாட்டு வளம் காணச் செல்கின்றனர். இவர்கள் சென்ற இடம் பூதத்தம்பியின் வீட்டுக்கு அருகில் இருந்த காரணத்தால் பூதத்தம்பி அந்திராசியை விருந்துண்ண அழைக்கின்றான். விருந்தின்போது பூதத்தம்பியின் அழகிய மனைவியாகிய அழகவல்லியை அந்திராசி காண்கின்றான். அவளுடைய அழகில் மயங்கிய இவன் எப்படியாவது அவளை அடைய வேண்டும் என்ற முடிவுக்கு வருகின்றான்.

வீட்டுக்குத் திரும்பிய அந்திராசி பூதத்தம்பி இல்லாத சமயமாகப் பார்த்துத் தனக்கு நம்பிக்கைக்குரிய சிப்பாய்களை அழைத்து தக்க பரிசில்களோடு சென்று தன்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துச் சாதகமான பதிலைப் பெற்று வரும்படி அனுப்புகின்றான்.

அந்திராசியின் அடாத செயலால் ஆத்திரமுற்ற அழகவல்லி அந்திராசியைக் கேவலமாக வைத்துடன் செருப்பையும், விளக்குமாற்றையும் பரிசில்களாக அவனுக்கு அனுப்பி வைக்கின்றாள்.

இதனால் அடக்கமுடியாத கோபமுற்ற அந்திராசி பழிவாங்க முடிவு செய்கின்றான்.

கொழும்பில் இருந்த தேசாதிபதியின் ஆணையின்படி, ஊர்காவற்றுறைக் கடலில் கோட்டை கட்ட அட்மிறல் முடிவு செய்கின்றான். இதற்குரிய பொறுப்பை அந்திராசியிடமும், பூதத்தம்பியிடமும் கொடுக்கின்றான். கச்சாய்த்துறையில் உள்ள கவறுகளை எடுத்துவரச் செய்தி அனுப்ப வேண்டும். அதுவும் அவசர அவசரமாகச் செய்யப்பட வேண்டும்.

பூதத்தம்பியை அந்திராசி நோக்கி, "நீங்கள் கோட்டைகட்டும் அலுவலை உடன்டியாகக் கவனியுங்கள். நான் கச்சாய்த்துறைக்குச் செய்தியை எழுதி அனுப்புகின்றேன். உங்கள் கையொப்பமும் வேண்டுமல்லவா? வெறுங் கடதாசியில் கையொப்பமிடுங்கள். வசனத்தைப் பின் எழுதுகின்றேன்" எனக் கூறிக் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்கின்றான்.

பின்னர் அந்திராசி அந்த வெறுங்கடதாசியில் பின்வருமாறு எழுதினான்.

"மதிப்புக்குரிய போர்த்துக்கேய தளபதி அவர்களே! நீங்கள் ஒல்லாந்தருக்கெதிராகப் படையெடுத்து வந்தால் நாம் உதவி செய்வோம். தந்திரத்தால் வெல்வதாயினும் உதவி செய்வோம். உங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம்"

இக்கடிதத்தை எடுத்துச் சென்று அந்திராசி அட்மிறல் அந்தோனியிடம் கொடுக்கின்றான். தற்செயலாக இக்கடிதம் தன்னிடம் சிக்கியதாகக் கூறிப் பூதத்தம்பிக்கு எதிராக அட்மிறலை சினங்கொள்ள வைக்கிறான்.

அட்மிறல் பூதத்தம்பியைப் பதவியிலிருந்து நீக்க விரும்புகின்றான். அந்திராசி "இராசத்துரோகத்தை மன்னிக்கலாமா? அப்படியானால் நான் கொழும்பில் உள்ள தேசாதிபதிக்கு அறிவிக்கின்றேன்' என அட்மிறலை மிரட்ட, அதற்கு அட்மிறல் "அப்படியானால் நீயே பூதத்தம்பிக்கு மரணதண்டனையைக் கொடு" எனக் கூறிவிடுகின்றான்.

பூதத்தம்பியைச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தபின் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது. அழகவல்லியையும் சிறையிலடைத்துக் கொடுமைப்படுத்திய பின் அவளைக் கலைத்துவிடுகின்றான் அந்திராசி.

இக்கொடுமை கொழும்பில் உள்ள தேசாதிபதிக்குக் கொழும்புக்குச் சென்று கைலாயபிள்ளையால் அறிவிக்கப்படுகிறது. அவன் அந்திராசியையும் அட்மிறலையும் விசாரணைக்காகக் கொழும்புக்கு அழைக்கின்றான்.



விடுதலையாகிய அழகவல்லி கணவனின் மரணத்தால் வேதனையுற்று அந்திராசியை "ஆனையடியாதோ அலியன்தான் தீண்டாதோ" என்று சாபமிடுகின்றாள்.

கொழும்புக்குச் செல்லும் காட்டுவழியில் யானையால் அடியுண்டு அந்திராசி மரணமடைகின்றான். கப்பல் மூலம் கொழும்புக்குச் சென்ற அட்மிறல் கப்பல் கவிழ்ந்து காலனுக்கிரையாகின்றான்.

## *யார் இந்த அந்திராசி*

வரலாற்று ஆவணங்களைப் பார்க்கும் போது அந்திராசி ஒரு சிங்கள இனத்தவன. அந்திராடே என்னும் பெயருடையவன், 'கரவா' எனும் மீனவர் சாதியைச் சார்ந்தவன். கிறிஸ்தவனாக மதம் மாறிய இவன, ஒல்லாந்தரின் நன்மதிப்பைப்பெற்று யாழ்ப்பாண முதலமைச்சராகிப் பணி புரிந்தான் எனச் சொல்லப்படுகிறது. (இராசநாயகம்) இதே கருத்தை யாழ்ப்பாண வைபவமாலையும் கூறுகிறது. (பக்; 88-90)

நாட்டுக்கூத்து பிரதிகளின்படி இவன் கரையூரைச் சேர்ந்த குருகுல வம்சத்தவன்.

இவனுடைய மூதாதையர் சிங்களவராக இருக்கலாமென்றும், நீண்டகாலம் குருநகரில் வாழ்ந்து தமிழராகியிருக்கலாமென்றும ஊகிக்க முடிகிறது. இக்குருகுலத்தவர் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களென சிவரத்தினம் கருதுகின்றார். (1968: 163-163) எதுஎப்படி இருப்பினும இவன் வேளாளரைவிடச் சாதியிற் குறைந்தவன் என்றும இவனுக்குக் கீழ் தொழில் புரிய உயர் சாதியினர் விரும்பவில்லையென்றும் கூத்துப்பிரதிகளின்றும் தெரியவருகிறது.

## *அந்திராசி தீயவனா?*

உண்மையில் அந்திராசி தீயவனா? இதற்கு பலரும் பலவிதமான பதில்களைக் கூறுகினறனர். அவனுடைய செயலகள் தீயவையே. அதில் ஒரு சந்தேகமும் இல்லை. ஆனால் அவனை அவ்வாறு செயறபட வைத்த காரணிகளையும நாம் நோக்குதல் வேண்டும்.

மீனவ சாதியைச் சேர்ந்த அந்திராசி கிறிஸ்தவனாக மாறி ஒல்லாந்தரின் நன்மதிப்பைப் பெற்று மந்திரிப் பதவியையும் 'முதலியார்' எனும் பட்டத்தையும பெறுகிறான்.

இதுவரைகாலமும் இத்தகைய பதவிகளை வகித்த உள்ளூரவர்கள் யாபேரும் வெள்ளாளர்களேயாவர். முதன் முதலாக குருகுலத்

தைச் சேர்ந்த ஒருவன் மந்திரியாக நியமிக்கப்பட்டமை பூதத்தம்பி போன்ற வெள்ளாளச் சாதியினருக்கு இயல்பாகவே பொறாமையையும் வெறுப்பையும் உண்டாக்கியதில் வியப்பில்லை. குறிப்பாக அந்திராசியின் கீழ் இரண்டாவது மந்திரியாகப் பணிபுரிந்த பூதத்தம்பி இவனுடைய கட்டளைகளைத் தான் ஏற்கவேண்டியிருக்கிறதே என மனதுக்குள் புழுங்கலானான்.

பூதத்தம்பி வைத்த விருந்தொன்றின் போது அந்திராசி பூதத்தம்பியின் மனைவி அழகவல்லியைக் கண்டு காமவசப்பட்டு அவளை அடையமுயற்சித்துத் தோல்வியும் அவமானமும் அடைவதாகவும் அதனால் வெப்பியாரமுற்ற அந்திராசி அவளையும் கணவனையும் பழிவாங்குவதாகவும் இந்நாடகத்திற் சித்திரிப்பது வழக்கம் என்பது முன்னரே கூறப்பட்டது. ஆனால பூதத்தம்பி உயர் அதிகாரிகளுக்கு வைத்த விருந்தொன்றின் போது அந்திராசியின் மனம் புண்படும்படியாக அவனை ஒரளவு வேறுபடுத்தி நடத்தியிருக்கின்றான். இதற்குச் சான்றாக என்னுடைய பீட்டனார், பேரனார் ஆகியோர் ஆடிய தென்மோடிக்கூத்தில் பின்வரும் பாடல் வரிகள் காணப்படுகின்றன.

வெள்ளாளன் வைத்த விருந்தினிலே என்னை
வேறுபடுத்திவிட்டான் — அந்தப்
பொல்லாத பூதத்தம்பிக் கொருபாடம்
புகட்டா திருப்பனோ நான்
செல்லாத செம்புக்காசோ? அந்திராசி ஒரு
திட்டம் வகுத்திடுவேன்
நல்லாகப் பூதன் குடும்பத்தைச் சூழ்ச்சியால்
நானும் அழித்திடுவேன்

(பாடல்: முருகேசையர்)

அழகவல்லி அந்திராசியை அவமானப்படுத்துவதற்காக விளக்குமாறும் செருப்பும் அனுப்பியதைவிட, இவனைப் புண்படுத்திய விடயம் சாதியின் பெயரால் தூற்றப்பட்டமையும் "தவளை தின்னி" என்று கேலி செய்யப்பட்டமையுமாகும். ஆகவே இவனை முழுக்க முழுக்க ஒரு தீய பாத்திரமாக நோக்கக்கூடாது. சாதியபிமானமும், தன்மானமும் மிக்க ஒரு பாத்திரமாகவும் சந்தர்ப்ப வசத்தால் தீயவனாக மாறிய ஒருவனாகவும் பார்க்க வேண்டும்.

## பூதத்தம்பி துரோகியா?

ஒல்லாந்தர் பார்வையில் பூதத்தம்பி தேசத்துரோகியாக இருக்கலாம். ஆனால் ஒரு யாழ்ப்பாண இராச்சியப் பிரசை என்று பார்க்கும்போது அவன் தேசத்துரோகியல்லன். பிறந்த மண்மீது பற்றுக் கொண்ட ஒருவனாகக் கொள்ள வேண்டும்



உண்மையில் பூதத்தம்பி ஒல்லாந்தருக்கு எதிராகப் போர்த்துக்கேயருக்குக் கடிதம் எழுதியிருந்தாலும்கூட அதைத் தவறு என்று கொள்ளமுடியாது. தாய்மண்ணை மீட்பதற்கு அவன் எடுத்த முயற்சியாக அதைக் கொள்ள வேண்டும்.

போர்த்துக்கேயரும் அந்நியர்தானே என்று வாதிடலாம். உண்மைதான். மண்விடுதலை வேண்டுபவன் எந்தப் பிசாசிடமும் உதவி கோரலாம் என்பது ஏற்கப்பட்ட ஒரு சித்தாந்தமாகும்.

நடிகமணி வி. வி. வைரமுத்து தந்த கையெழுத்துப் பிரதிகளையும், ஏனையோரிடமிருந்து பெற்றுக்கொண்ட பிரதிகளையும் ஒப்பு நோக்கி சில மாற்றங்களுடன் பூதத்தம்பி நாடகம் மூன்று மணித்தியாலங்கள் நடிக்கக்கூடியதாக எழுதப்பட்டது. அப்பிரதியின் துணைகொண்டு வைரமுத்து மீண்டும் பூதத்தம்பியை மேடையேற்றிப் பெருவெற்றியீட்டினார்.

அந்திராசி பாத்திரமேற்று நடித்த வைரமுத்து அப்பாத்திரத்திற்கென்றே பிறந்தவர் என்று கூறுமளவுக்கு அற்புதமாக நடித்து வந்தார்.

அரிஸ்ரோட்டல் கூறிய கத்தார்சிசை (Catharcis) அரிச்சந்திராவில் மட்டுமன்றி பூதத்தம்பியிலும பெறறனுபவிககததககதாக வைரமுத்துவின் நடிப்பு அமைந்தது.

இப்பொழுது நூலுருவில் உங்கள் கைகளில் உள்ள சொல்லுருவானொலிக்கெனத் திருத்தியெழுதப்பட்ட பிரதியைமீண்டும் புதுக்கி எழுதிய ஒன்றாகும். இது ஒரு மணித்தியாலத்துள் நடிப்பதற்கென எழுதப்பட்ட காரணத்தால் முக்கியமான பாடல்களும் வசனங்களும் பல நீக்கப்பட்டுவிட்டன.

## பூதத்தம்பி நாடகம் கூறும் செய்தி

பூதத்தம்பி நாடகம் உண்மைக் கதையைக் கூறுகிறது. ஆயினும் இந்நாடகததினூடாக அரிய செய்திகள சிலவற்றையும் இது சொல்லத் தவறவிலலை. இவை சிந்தனைக்குரியவை.

- இக்கதை நிகழ்ந்த காலத்திலும் இலங்கை அந்நியர்களுக்கு (ஒல்லாந்தருககு) அடிமைபபட்டிருந்தது.
- தேசாபிமானமின்றி அந்நியனுக்குக் கீழ் தொழில் புரியச் சென்றால் இததகைய விபரீத முடிவுகள தவிர்கக முடியாதவை தான. இது இக்காலத்துக்குப் பொருந்தும்.
- வரலாற்று ஆவணங்களில் பூதத்தம்பி லூவிஸ் பூதத்தம்பி என்றே காணப்படுகிறது. எனவே இவன் கிறிஸ்தவனாக மாறியே உத்தியோகம் பெற்றிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

- ஒரு பொறுப்புவாய்ந்த மந்திரி வெறுங்கடதாசியில் கையொப்பமிடலாமா? பூதத்தம்பியின் இச்செயல் அவனுடைய உயிரை மட்டுமா குடித்தது? குடும்பத்தையே அழித்து விட்டது.

- ஒரு பிரதேசத்தின் பொறுப்புவாய்ந்த உயர் அதிகாரி (அட்மிறல்) ஆழமாக விசாரியாது அந்திராசியின் தூண்டுதல்களுக்கு ஆளாகலாமா? பூதத்தம்பிக்கு மரணதண்டனை விதிக்கும் அதிகாரத்தை அந்திராசிக்கு வழங்கலாமா?

- அந்திராசி காமவசப்பட்டுப் பரிசுப்பொருள்களைச் சிப்பாய்களூடாக அனுப்பியமை எவ்வளவு பேதமை. ஆசை வெட்கமறியாது என்பார்களே. அது எவ்வளவு உண்மையாகி விட்டது. அவன் வகித்த பதவிக்கு இது இழுக்கல்லவா?

- அழகவல்லியும் கோபாவேசமுற்று, செருப்பையும் விளக்குமாற்றையும் அனுப்பியமை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. இன்று பெண்ணியம் பேசுவோர் இது சரியெனக் கூறலாம், ஆயினும் இதனால் நிகழக்கூடிய பின்விளைவுகளைப்பற்றி அவள் எண்ணிப் பார்க்கவில்லை.

- அந்திராசியால் தன்னுடைய வஞ்சத்தைத் தீர்க்கமுடிந்தாலும் நிம்மதியாக வாழமுடியவில்லை.

  கொழும்பில் விசாரணையைஎதிர்நோக்க வேண்டியதாயிற்று. காட்டில் யானையால் அடியுண்டு இறக்க வேண்டியதாயிற்று.

- கற்புள்ள அழகவல்லியின் சாபம் பலித்துவிட்டது.

- அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்பதை இக்கதை தெட்டத் தெளிவாக விளக்கி நிற்கிறது. தர்மம் இறுதியில் வெற்றி பெறுகிறது

- அரசியல் அதிகாரம் மிக்கவர்கள் எதனையும் சாதிக்கவே முனைவார்கள் பின்விளையப் போவதைப்பற்றி அவர்கள் சிந்திப்பதேயில்லை. இது இன்றுவரை தொடர்கதையாக நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

- ஒருவர் முகத்தில் ஒருவர் சேறுபூசுவதும், ஒருவரை ஒருவரை ஒருவர் வஞ்சம் தீர்க்கமுயல்வதும், இன்று அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இது அரசியல்வாதிகளுக்குச் சமர்ப்பணம்.



## பூதத்தம்பி நாடகப்பாடல்கள்

இன்று பலராலும் நடிக்கப்படும் பூதத்தம்பி நாடகத்தில், பல புலவர்கள் எழுதிய பாடல்கள் உள்ளன. எனினும் கந்தையாபிள்ளை உபாத்தியார், சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோருடைய பாடல்கள் பெரிதும் கையாளப்படுகின்றன. ஒருசில பாடல்கள் யாரால் எழுதப்பட்டவை என்று தெரியவில்லை.

இந்நாடகத்தில் நாட்டுக் கூத்துப்பாடல்களும், இசை நாடகப் பாடல்களும் விரவிக் காணப்படுகின்றன என்பது உண்மையே, உதாரணத்துக்குச் சிலவற்றை நோக்கலாம்.

பூதத்தம்பி சட்டநாதரைத் தன்னுடைய வழிபடுதெய்வமாகவுடையவன். நல்லூர்க் கந்தசுவாமி மீதும் பக்தியுடையவன்,

நாடகத்தின் ஆரம்பத்திலேயே அவன் சட்டநாதரை வழிபடுவதாக அமைந்துள்ள விருத்தம் நாட்டுக்கூத்திலிருந்து பெறப்பட்டது.

கையிலை வாழ் ஈசா போற்றி
  கண்ணுதல் பரனே போற்றி
அய்யில் வனத்தாய் போற்றி
  அம்பிகை பாகா போற்றி
தூயவெண் பிறையணிந்த
  துய்யநல் பரனே போற்றி
தாயினு மினியாய் போற்றி
  சட்டநாதப் பிரம்மனே போற்றி.

அந்திராசி பாடுவதாக அமைந்த,

தொன்று நிகழ்ந்ததும் இன்று இலங்கிடும்
  சீர்பெறு யாழ் நகரே — இன்று
கண்டநல் இனிய காட்சிகள் யாவும்
  சிந்தை கவர்ந்திடுதே — பூதரே
சிந்தை கவர்ந்திடுதே.

எனும் பாடல் யாரால் பாடப்பட்டதெனத் தெரியவில்லை; ஆனால் பாரதியார் பாடிய,

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
  சூழ்கலைவாணர்களும — இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
  இயல்பினளாம் எங்கள் தாய்

எனும் பாடலைப் பின்பற்றி எழுதப்பட்டதென்பதும் காலத்தால் பிந்தியதென்பதும் தெரியவருகிறது. இது காவடிச்சிந்தாகும்.

பூதத்தம்பியும் அந்திராசியும் பாடும் பின்வரும் பாடல்கள் சங்கரதாஸ் சுவாமிகளால் பாடப்பட்டதாகும்.

பூதத்தம்பி:- அறுசுவையோடு விருந்து அருந்த என்
வீட்டினிற்கே வருவீர்

அந்திராசி:- தாகம் பசியது இப்போ எனக்கில்லை
இன்னோர் முறை தாரும்.

இதனையொத்த பாடல்கள் மயானகாண்ட நாடகத்திற் காணப்படுகின்றன. பூதத்தம்பி விலாசத்திலும் இவற்றையொத்த வரிகள் காணப்படுகின்றன.

அழகவல்லி பாடுவதாக அமைந்த

என்னையும் மதித்திடாமல் இக்கொடு நினைவுகொண்டு
தன்னையும் அறிந்திடாத தப்பிலிப்பதரே இன்று
பொன்னையே கொடுத்தனுப்பி போதுமகள் என நினைந்து

எனவரும் விருத்தமும், அதனைத் தொடர்ந்துவரும்,

சன்னை செய்தனுப்பினானோ — சண்டாளனவன்
சன்னை செய்தனுப்பினானோ

எனத் தொடரும் பாடல்களும் கந்தையாபிள்ளை உபாத்தியாரால் எழுதப்பட்டனவாகும்.

ஆத்திரமுற்ற அரசன், சேனாதிபதியாகியோர் பாடும், 'கல்வெட்டு' எனும் பாடல் வகையொன்று நாட்டுக்கூத்துக்களில் உண்டு. கல்வெட்டைக் கூறியபின் பாடும் சந்தநடை அல்லது முடுகு நடையுள்ள பாடலுக்கு ஏற்ப ஆடும் ஆடல் நாட்டுக்கூத்துக்களில் மிகவும் கவர்ச்சியுடையதாகும்.

கண்டியரசன் நாடகத்தில் வரும்

ஆகட்டும் ஆகட்டும் அவளையினி விடுவேனோ
அகந்தைகள் மிகுதியாச்சோ
அமரரொடு அசுரர் கந்தருவர் கிங்கிலிபரும்
அமர் வரினும் அஞ்சுவேனோ

எனும் பாடலை யொத்த (கண்டியரசன் 1978: 76) முடுகு நடைப்பாடலொன்று பூதத்தம்பியில் வருகின்றது.



அது வருமாறு:

அட்டகிரி அசையினும் துட்டர்படை சருவினும்
அமரரொடு அசுரர் வரினும்
அண்ட முகடிடியினும் கொண்டலடி பொழியினும்
அந்திராசி அசைய வருமோ?
(இந்நூல் பக்: 27)

இது கண்டியரசன் கூத்துப் பாடலைவிடக் காலத்தால் முந்தியது.

மோகனத்தில் அமைந்த மேற்படி விருத்தத்தைப்பாடிய பின் நடிகமணி வி. வி. வைரமுத்து சிந்து பைரவியிற் பாடும்

"என்ன வசை பேசி விட்டாளோ - அவள்
ஏதுவசை பேசிவிட்டாளோ

எனும் பாடல் ரௌத்திர ரஸத்தை வெளிப்படுத்திச் சுவைஞர்களைக் கவர்ந்திழுக்கும். இவை கந்தையாபிள்ளை எழுதிய பாடல்களாகும்.

மேற்படி பாடல் மட்டுமன்றிச் சந்த நடையில் அமைந்த

"அட்ட திக்கிலும் மட்டிலாப் புகழ்
கொண்டவர் அட்மிறலே - அவர்
ஆணையிட்டபடி செய்து முடித்திட
யாம் மிக வல்லபரே - பூதரே
யாம் மிக வல்லபரே
(இந்நூல்:பக் ...20)

எனும் காவடிச்சிந்தும் மிகவும் சுவையுடையதாகும்.

இந்நாடகத்தில் அழகிய வருணனைகளும் கற்பனை நயமும் மிக்க பாடல்கள் பலவுள்ளன. எடுத்துக்காட்டாக அந்திராசி அழகவல்லியை வருணித்துப்பாடும பாடலைக் கூறலாம்.

பல்லவி

ஆசையுண்டாகத் தடையோ
அழகவல்லியைக் கண்டால் (ஆசை.....)

அநுபல்லவி

காமனது பாரியோ பூமனது நாரியோ
அழகவல்லியைக் கண்டால் (ஆசை.....)

சரணம்

குயிலோ புகையோ கூந்தல்?
அயிலோ கயலோ கண்கள்?
குவிந்த தாமரை மலரோ? அது
சிவந்த கோங்கின் இதழோ?
அட...! அட...!! அட...!!!

(ஆசை......)

இப்பாடல் விலாசத்திலிருந்து எடுக்கப்பட்டு சில வரிகள் மாற்றப் பட்டெழுதப்பட்டுள்ளன.

பூதத்தம்பி நாடகத்தில் வரும் பாடல்கள் அனைத்தும் எளிமை யும் இனிமையும் மிக்கன. எடுத்துக் காட்டாகச் சிப்பாய்கள்பாடும் பாடல்களைக் கூறலாம்.

எங்களைக் கண்டவள் சிங்கம்போலக் கோபித்து
ஏசினள் பேசினள் காண் - இதை
என்னென்று மந்திரிக் குன்னிதமாக
இயம்புவோம் வாடா தோழா

(இந்நூல்: பக்...26)

வேறு

நடப்போம் தோழா நல்லூருக்கு
நடப்போம் நகரம் தன்னை
கடப்போம் அந்தக ரென்ன
மடுப்போம் பூதனைத்தானே
பிடிப்போம் வேதனை செய்ய

(இந்நூல்: பக்...32)

சங்கரதாஸ் சுவாமிகள் பாடிய பாடல்களில் அவருடைய இசை நாடக முத்திரையைக் காணலாம். இசையினூடாக கருத்துவெளிப் பாட்டையும், பாத்திரங்களின் மனோபாவத்தையும் வெளிப்படுத்தத் தக்கதாக அவருடைய பாடல்கள் அமைவதைக் காணலாம். இத்தகைய பாடல்கள் விலாசத்திலிருந்து எடுக்கப்பட்டு கையாளப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக:

அந்திராசி:- காத்தருளச் சொல்லிக் காலில் வீழ்ந்துமே
கத்துவ தென்னடி கள்ளி
காலன் வந்தால் பணம்
காக்குமோ சொல்லடி கள்ளி



அழகவல்லி:- கன்னியென்றே என்னை யிங்கு
தள்ளிப் பேச வேண்டாமையா
உள்ளபடி நாமேயிங்கு
உமக்கடிமை யாவோ மையா

(இந்நூல் பக்:...36)

சுவாமிகள் எழுதிய சம்பூர்ண அரிச்சந்திராவிலும் அரிச்சந்திர னுக்கும் சந்திரமதிக்குமிடையில் நடைபெறும் தருக்கப் பாடல்கள் சில இவ்வாறே அமைந்துள்ளன.

அரிச்சந்திரன்:- பத்தினியை விற்ற பாவி
பாலனைக்கை விட்ட பாவி
சத்தியத்தைக் காத்த பாவி
தாரணியில் பெரும் பாவி

சந்திரமதி:- என்ன காலம் இந்தக் காலம்
எந்தனுக்கு வந்த கோலம்
அன்னமே காசியில் வாழும்
ஆதிவிசா லாக்ஷி தாயே.

கணவனை அநியாயமாக இழந்த நிலையில் அழகவல்லி பாடும் பின்வரும் பாடல் அவலச்சுவை நிரம்பியது.

பொன்னுறையும் மேனியனே போர் வேந்தர் பொக்கிஷமே
சிந்தை கலங்க வைத்து சென்றனையோ ஐயா நீ
எந்தையாம் ஈசன் இப்படியோ ஆக்கிவிட்டான்
இந்தத் துரோகமதை ஏன் செய்தான் அந்நியனாம்
அந்திராசி தன்னை ஆனை அடியாதோ
ஆனை அடியாதோ அலியன் தான் தீண்டாதோ

(இந்நூல் பக்...39)

இதே போல,

புவிநாயகனார் முதலி மகிழ்வினொடுபெற்ற
புதல்வனென்பதற் கழுவனோ?

எனும் பாடலும் உள்ளத்தை உருக்க வல்லது

எந்த நாடகமும் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகி கடவுள் வாழ்த்துடனேயே முடிவடைவது வழக்கம். அதற்கமைய இந்நாடக மும் பின்வரும் வாழ்த்துப் பாடலுடன் நிறைவெய்துகிறது.

### விருத்தம்

கங்கையை அணிந்தாய் போற்றி
கண்மூன்று உடையாய போற்றி
அங்கிகைக் கொண்டாய் போற்றி
ஆலத்தை உண்டாய் போற்றி
சங்கரா போற்றி போற்றி
தாயுமை பாகா போற்றி
எங்களைக் காப்பாய் போற்றி
எந்தையே போற்றி போற்றி

(பாடல்: காரை. செ. சுந்தரம்பிள்ளை)

பூதத்தம்பி விலாசத்தில் பின்வரும் வாழ்த்துப் பாடலுள்ளது.

மன்னவர் வாழி முன்னூல்
மறையவர் பின்னோர் வாழி
நன்னெறி நீதி வாழி
நலமழை முகில்கள் வாழி
துன்னிய பொருள்கள் சேர்ந்து
துகளற விளங்குகின்ற
இன்னிசை விலாசம் பாடி
ஆடுவோர் என்றும் வாழி

அந்தக் காலத்தில் விலாசக் கூத்துகள் ஆட்டக் கூத்துக்களாகவும் ஆடப்பட்டன என்பது இப்பாடல் மூலம் தெரியவருகிறது.

பூதத்தம்பி விலாசத்தில் கற்பனை கலந்த ஒரு செய்தி உள்ளது. பூதத்தம்பிக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது. கொலைஞர்கள் அவனைக் கல்லுண்டாய் வெளிக்கு எடுத்துச் சென்று வாளால் வெட்டுகின்றவர். ஆனால் அவன் மீது எவ்வித வெட்டும் விழவில்லை. அப்பொழுது கொலைஞர்கள் பூதத்தம்பியின் உடல் முழுதும் பரிசோதிக்கின்றனர். அச்சமயம் அவனது தலையில் வெட்டறா மூலிகை ஒளித்து வைக்கப்பட்டிருந்தமையைக் கண்டனர். அதனை எடுத்த பின்னர் வெட்டிய போதே பூதத்தம்பி மரணமடைவதாக விலாசம் கூறுகிறது. மிகவும் அண்மைக்காலம்வரை இந்த வெட்டறா மூலிகை பற்றிய நம்பிக்கை தமிழ் மக்களிடையே இருந்து வந்திருக்கிறது.

சுருக்கமாக பூதத்தம்பி நாடகம் ' பற்றிக் குறிப்பிடும் போது ஒன்றை மட்டும் நாம் மறந்து விட முடியாது.



அன்னியர் ஆட்சியின் போது அநியாயமாக உயிரையிழந்த இம்மண்ணின் மைந்தர்கள் பற்றி நாம் சிந்திக்காமலிருக்க முடியுமா? எவ்வளவு விசுவாசமாக நாம் உழைத்தாலும் அந்நியர் ஆட்சியின் போது அதற்குரிய பரிசு கிடைக்குமா? பூதத்தம்பிக்கு நிகழ்ந்தது தான் நிகழுமா? இது சிந்தனைக்குரியது.

— காரை செ. சுந்தரம்பிள்ளை

## இக் கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்கள்


| | |
|---|---|
| இராசநாயகம் செ. | யாழ்ப்பாண இராச்சியம்<br>யாழ்ப்பாணம் 1938 |
| கந்தையாபிள்ளை கு. க | பூதத்தம்பி விலாசம்<br>மயிலிட்டி 1890 |
| சொக்கலிங்கம் க. | ஈழத்துத் தமிழ் நாடக<br>இலக்கிய வளர்ச்சி<br>யாழ்ப்பாணம் 1977 |
| சொர்ணலிங்கம் க. | ஈழத்தில் நாடகமும் நானும்<br>யாழ்ப்பாணம் 1968 |
| சுந்தரம்பிள்ளை செ. காரை | ஈழத்து இசை நாடக வரலாறு<br>யாழ் இலக்கிய வட்டம்<br>யாழ்ப்பாணம் 1990 |
| | நடிகமணி வி. வி. வைரமுத்துவின்<br>வாழ்வும் அரங்கும்<br>பாரதி பதிப்பகம்<br>யாழ்ப்பாணம் 1996 |
| மயில்வாகனப் புலவர் | யாழ்ப்பாண வைபவ மாலை<br>யாழ்ப்பாணம் 1958 |
| Sivaretnam C. | The Tamils in early Ceylon<br>Colombo. 1968 |


## நாடகக் கையெழுத்துப் பிரதிகள்

| | |
|---|---|
| சங்கரதாஸ் சுவாமிகள் | — பூதத்தம்பி நாடகப்பாடல்கள் |
| முருகேசையர் | — பூதத்தம்பி விலாசம் |
| வைரமுத்து வி. வி. | — பூதத்தம்பி நாடகம் (வசனம்) |

# பூதத்தம்பி
## (இசை நாடகம்)

### அங்கம் - 1

(பூதத்தம்பியும் அழகவல்லியும் சட்டநாதர் கோவிலில் வணக்கம் செய்தல்)

விருத்தம்

கைலைவாழ் ஈசா போற்றி கண்தணுல் பரனே போற்றி
அயிலவனத்தாய் போற்றி அம்பிகைபாகா போற்றி
தூயவெண்பிறையணிந்த துரியநல் பரனே போற்றி
தாயினு மினியாய் போற்றி சட்ட நாதப் பிரம்மனே போற்றி

(இருவரும் வீட்டுக்கு வருதல்)

அழகவல்லி:- அன்பரே ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

பூதத்தம்பி:- என்ன சொல்லு

அழகவல்லி:- உத்தியோகம் புருஷலட்சணம் என்பார்களே. அதனால் நீங்களும் ஒரு உத்தியோகம் பெற்று விட்டால் என்ன?

பூதத்தம்பி:- என்ன உத்தியோகம்?



அழகவல்லி:- எங்கள் யாழ்ப்பாணப் பகுதியை ஆட்சி செய்வதற்கு அட்மிறல் அந்தோனி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளாராம். அவர் யாழ்ப்பாணத்தின் பிரபல செல்வந்தர்களான கல்விமான்களை உத்தியோகம் பார்க்க அழைக்கிறாராம். நீங்களும் சேர்ந்து விட்டால் எவ்வளவு லட்சணமாயிருக்கும்.

பாட்டு

பூதத்தம்பி:- அன்பிற்குகந்த எந்தன் அழகவல்லியே உந்தன்
நெஞ்சில எழுந்த எண்ணமே
சிந்தை கலங்க வேண்டாம் தேவியே இன்றுநான்
சென்றமிறால் மன்னனிடம் சேர்ந்துத
யோகம் பெறுவேன்

(அன்)

அழகவல்லி:- மன்னவரேப்ராணநாதா மைத்துனராம்மா
துலனை
இத்தினமழைத்துச் செல்லுவீர்
கள்ளம் கபடமற்ற வெள்ளை மனத்தவராம்
கைகொடுத்துதவுமண்ணர் கைலாயபிள்ளை
தன்னை
இத்தினம் அழைத்துச் செல்லுவீர்

பூதத்தம்பி:- ஓகோ உனது அண்ணர் கைலாயபிள்ளைக்கும் உத்தியோகம் வேண்டுமா? எனக்கும் உதவி தானே! இருவருமே போகிறோம். சரிதானே?

### அங்கம் - 2

(அட்மிறல் (அமிறால்) கோட்டை)

அட்மிறல்:- வாருங்கள். என்ன வேண்டும்?

விருத்தம்

பூதத்தம்பி:- தகமைசேர் யாழ்ப்பாணத்தை
தண்ணளியுடனே காக்கும்
மகிபனே போற்றி எங்கள்
வள்ளலே போற்றி போற்றி

வகைசெறி உத்தியோகங்கள்
வண்மையாய்ப் பெற்றுக்கொண்டு
சுகமுடன் வாழ வேண்டித்
துரையிடம் வந்தோமையா

அட்மிறல்:- நீங்கள் யார்! இவர் யார் சொல்லுங்கள்

### விருத்தம்

பூதத்தம்பி:- சீர்பெறு நல்லூர் தன்னில் சிறப்புடனிருந்து வாழ்ந்த
பேர், புவிநாயகன் பிள்ளையான் பூதத்தம்பி
ஏர்பெறும் இரணசிங்கர் என்பவர் மருகராகும்
பேரிவர் கைலாயபிள்ளை என்மைத்துனர் அறிந்
திடீரே.

அட்மிறல்:- நீங்கள் உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது. அதனால் படித்திருக்கிறீர்கள் உங்களுக்கு உயர்ந்த பதவிகள் கொடுக்கிறேன்.

கைலாயபிள்ளை:- துரை அவர்களின் இஷ்டம் எதுவோ அதை நாம் ஏற்கிறோம். இந்த நாட்டுக்கு எம்மால் முடிந்த சேவை புரிவோம்.

அட்மிறல்:- பூதத்தம்பி! உங்களை எனது பிரதம அமைச்சர் அந்திராசிக்கு உதவி மந்திரியாக நியமிக்கிறேன்.

கைலாயபிள்ளை! உங்களை கச்சாய்த்துறைக்கு வன்னிமையாக, அதாவது மணியகாரராக நியமிக்கிறேன். இன்றே பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள்.

பூதத்தம்பி:- நன்றி.

கைலாயபிள்ளை:- மிக்க நன்றி

## அங்கம் - 3

(பூதத்தம்பி வீடு)

பூதத்தம்பி:- அழகவல்லி!

அழகவல்லி:- வந்துவிட்டீர்களா, வாருங்கள், வாருங்கள், இது என்ன புதிய உடை?



பூதத்தம்பி:- உனது எண்ணம்போல எனக்கும் உன் அண்ணர் கைலாயபிள்ளைக்கும் உத்தியோகங்கள் கிடைத்து விட்டன. சந்தோஷம் தானே.

அழகவல்லி:- எல்லாம் சட்டநாதப் பெருமான் அருள்தான்.

பூதத்தம்பி:- பிரதம அமைச்சர் அந்திராசி அவர்களுக்கு உதவி மந்திரியாக இன்றே பதவி ஏற்று விட்டேன். கைலாய பிள்ளையவர்கள் கச்சாய்த்துறைக்கு வன்னிமையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அழகவல்லி! ஒரு விசேட செய்தி.

அழகவல்லி:- சொல்லுங்கள்

பூதத்தம்பி:- நாளைக்காலை பிரதமமந்திரியாரும் நானும் எங்கள் நல்லூர்ப் பகுதியின் வளங்களைப் சுற்றி பார்த்துச் சொல்ல வேண்டுமென்று அட்மிறல் அரசரின் ஏற்பாடு. எங்கள் வீதிக்கும் வருவோம். வாசலில் கோலமிட்டு வடிவாக வைத்திருக்க வேண்டும்.

அழகவல்லி:- களைத்துப்போயிருக்கிறீர்கள். வாருங்கள சாப்பிடலாம்.

## அங்கம் - 4

(வீதி)

### பாட்டு

அந்திராசி:- தொன்றுநிகழ்ந்தது இன்று இலங்கிடும்
சீர்பெறு யாழ் நகரே! — இன்று
கண்டநல் இனிய காட்சிகள் யாவும்
சிந்தை கவர்ந்திடுதே — பூதரே
சிந்தை கவர்ந்திடுதே.

அட்ட திக்கிலும் மட்டிலாப் புகழ்
கொண்டவர் அட்மிறலே — அவர்
ஆணையிட்டபடி செய்து முடித்திட
யாம்மிகவல்லவரே — பூதரே
யாம்மிகவல்லவரே.

நண்பரே! எவ்வளவோ தூரம் சென்று நாட்டுவளம் பார்த்துவிட்டோம். அன்தோனி அரசர் திட்டமிட்டால் அதை நடைமுறைக்கெடுப்பதில் அவருக்கு நிகர் அவரே தான். சரிபுறப்படுவோமா?

பூதத்தம்பி:- மந்திரியாரே! வெய்யிலோ கடுமையாக எரிகிறது. நேரமும் மதியமாகிவிட்டது. பசியோ!

அந்திராசி:- வயிற்றைக்குடைகிறது என்கிறீர்.

பூதத்தம்பி:- அதனால்தான்......

அந்திராசி:- நண்பரே! மனதில் எதையோ வைத்துக்கொண்டு வெளியில் காட்டத் தயங்கிறீர். என்னவென்று சொல்லும்.

பூதத்தம்பி:- அதோ தெரிகிறதே அதுதான் எனது வீடு ...... எனது வேண்டுதலை மறுக்கமாட்டீர்கள் என நம்புகிறேன்

அந்திராசி:- என்ன சொல்லப்போகிறீர் பூதரே.

பாட்டு

பூதத்தம்பி:- அறுசுவையோடு விருந்து அருந்த என்
வீட்டினிற்கே வருவீர்.

அந்திராசி:- தாகம் பசியது இப்போ எனக்கில்லை
இன்னோர் முறை தாரும்.

பூதத்தம்பி:- இன்னோர் முறையல்ல இன்றுதான் என்னுடன்
இனிதுண்டு சென்றிடுவீர்.

அந்திராசி:- உண்பதற்கொன்றுமில்லைக் கீழ்த்திசை தன்னிலே
கெவுளி ஒன்று சொல்லுதே.

பல்லி ஒன்று சொல்லியதைக் கவனித்திரா.

பூதத்தம்பி:- அது எனக்கும் கேட்கவில்லை. கெவுளி அடிக்கடி சொல்லும். அதைப்பற்றி யோசிக்காதீர்கள்.

அந்திராசி:- ம்................விடமாட்டீர் போலிருக்கிறது. சரி வருகிறேன்.

சேவகர்களே! நீங்கள் கோட்டைக்குப் போங்கள் நான் வந்துவிடுவேன்.



## அங்கம் - 5

(வீடு)

அந்திராசி:- நண்பரே விருந்து வெகு பிரமாதம். அறுசுவையோடு பரிமாறினீர்கள்.

பூதத்தம்பி:- எனது மனைவி சமையற் கலையை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்.

அந்திராசி:- உங்கள் மனைவி?

பூதத்தம்பி:- அழகவல்லி!......மந்திரியார், விருந்து வெகு பிரமாதம் என்று பாராட்டுகிறார்.

அழகவல்லி:- நன்றி!.. ..............

அந்திராசி:- நண்பரே! தண்ணீர் வேண்டும்.

பூதத்தம்பி:- எடுத்து வருகிறேன்............ (அழகவல்லி கொடுக்க)

பூதத்தம்பி வாங்குதல். அந்திராசியின் பார்வை. அழகவல்லிமேல் விழுதல்)

(தண்ணீர் குடித்தபின்)

அந்திராசி:- நண்பரே! இன்றுமுதல் நாம் நெருங்கிய நண்பர்களாகிவிட்டோம். உடலால் வேறுபட்டாலும் உள்ளத்தால் நாம் ஒருவரே! உங்கள் குடும்ப நலம் பெருக சுற்றமித்திரர் சுகம் பெருக, என்னால் ஆனதைச் செய்வேன். அப்போ, நான் புறப்படலாமா!

பூதத்தம்பி:- மிக்க மகிழ்ச்சி வாருங்கள்.

## அங்கம் - 6

(அந்திராசி விடுதி)

கட்டளைக்கலித்துறை

கத்தியவோசையலை மீனுலவும்கடல் வளைந்த
மத்தியலோகம் பிறந்தவர் யாவரும் மங்கையர்க்கே
பத்தியதாகவே அனுதினம் பாதப்பணி புரிந்தால்
சத்தியலோகமுடன் கிடைக்குகும் தடையொன்றிலையே.

பாட்டு

ஆசையுண்டாகத் தடையோ!
அழகவல்லியைக்கண்டால் (ஆ)
காமனது பாரியோ பூமனது நாரியோ
அழகவல்லியைக் கண்டால் (ஆ)
குயிலோ புகையோ கூந்தல்
அயிலோ கயலோ கண்கள்
குவிந்த தாமரை மலரோ! அது
சிவந்தகோங்கின் இதழோ
அட அட அட (ஆ)

ஆஹா! மாம்பழநிறமும் மதிமுகமும் கொண்ட அந்த மின்னவிடை அழகவல்லி. இப்படிப்பட்டவள் அந்த அப்பாவி பூதனுக்கு மனைவியா? சேச்சே! அவள் எனக்கும் மனைவியாக இருந்தால் எப்படியிருக்கும். ஏன் இருக்க முடியாது. இரவு முழுக்க நித்திரையே வரவில்லையே... உம்.... பார்ப்போம்.

சிப்பாய்! ..... சிப்பாய்!

சிப்பாய்:- கூப்பிட்டீர்களா?

அந்திராசி இருவருமே வாருங்கள் ...... உங்களை நன்றாக அவதானித்திருக்கிறேன்... ராஜ விசுவாசத்துடன் சேவை செய்கிறீர்கள் ..... உங்களைப்பற்றி அரசரிடமும் சொல்லியிருக்கிறேன் ......... உங்கள் படியை உயர்த்தவும். எண்ணியிருக்கிறேன். ............ நான் சொல்வதைக் கேட்கிறீர்களா?

சிப்பாய்:- நல்லதுங்க ............ சொல்லுங்க.

அந்திராசி:- மந்திரி பூதத்தம்பியின் வீடு உங்களுக்குத் தெரியுமல்லவா ...... நேற்று அங்கே விருந்துண்டேன். இரவு முழுக்க நித்திரையே வரவில்லை ...... இந்த பூதன் மனைவி அழகவல்லியைக் கண்டேன். அவள் மீது மையல் கொண்டேன்.

சிப்பாய்:- கொள்ளுங்க .........

அந்திராசி:- ஆமாம். உங்களால் ஆகவேண்டியதுதான்.

சிப்பாய்:- நாங்கள் என்ன செய்யிறதுங்க?



அந்திராசி:- நான் ஒரு ரொக்கத் தயிலாவைத் தருகின்றேன்......
இருங்கள் எடுத்து வருகிறேன் ...... பூதத்தம்பி இங்கே கோட்டைக்குள் தான் இருக்கிறார். அவரை நான் தாமதப்படுத்துகிறேன். நீங்கள் அழகவல்லியிடம் சென்று அந்திராசி மந்திரியார் தங்கள் மீது மையல் கொண்டு இந்த ரொக்கத்தைலாவை அன்பளிப்பாகக் கொடுத்தாரென்று கூறிவிட்டு வாருங்கள். உம் என்ன?

சிப்பாய்:- சரியுங்க

அந்திராசி:- நான் இப்பொழுதே அரசரிடம் சென்று உங்கள் படி உயர்வைப் பற்றிப் பேசப்போகிறேன். உம் புறப்படுங்கள்.

## அங்கம் - 7

(பூதத்தம்பி வீடு)

சிப்பாய்:- அம்மா! அம்மா!

அழகவல்லி:- யாரது?

சிப்பாய்:- நாங்கதானுங்க.

அழகவல்லி:- கணவர் கோட்டைக்குள் தானே இருக்கிறார் இங்கில்லையே.

முதற் ஏன் வந்தீர்கள்?

சிப்பாய்:- அம்மா! பிரதம மந்திரியார் அவர்கள் நேற்று இங்கு விருந்துக்கு வந்தாராம்.

இர. சிப்:- தங்களைக் கண்டு விட்டாராம்.

முதற் சிப்:- மையல் கொண்டு விட்டாராம்.

இருவரும்:- அதனால் இந்த ரொக்கத் தயிலாவைத் தங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து வரச் சொன்னாருங்க .............. என்ன சரிதானே.

முதற்சிப்பாய்:- சரி ரொம்பச் சரி.

அழகவல்லி:- என்னடா அது?

### விருத்தம்

என்னையும் மதித்திடாமல் இக்கொடுநினைவு
கொண்டு
தன்னையுமறிந்திடாத தப்பிலிப்பதரே இன்று
பொன்னையே கொடுத்தனுப்பி பொதுமகளென
நினைந்து

### பாட்டு முடுகுநடை

சன்னைசெய்தனுப்பினானோ — சண்டாளனவன்
(சன்...)
சன்னைகள் பண்ணியவன் அந்நியனாமந்திராசி
சென்னியை அரிந்து நானும் — இந்நிலமே
வீழ்த்துவேனே (சன்...)

(தொகையறா)

போக்கிரித்தனமாயென்மேல் பொங்கிய மையல்
கொண்டு
ஜாக்கிரத்தோடேயும்மைத் தந்திரம் செய்து விட்ட
ஆக்கத்தின் செருக்குக் கொண்ட அந்நியன்
மடையனுக்கு

### பாட்டு

நாக்குடனே மூக்கரிவிப்பேன். கேளடா தூதரே
(நாக்...)

### தொகையறா

செத்திடுதவளையோடு சேல்கயல் முதலாம் யாவும்
குத்திரத்துடனே தின்று கொழுப்பேறிய நஞ்சனவன்
சுத்தமிலாத நெஞ்சன் சுறுக்கினிலுமை விடுத்த
ஆக்கத்தின் செருக்குத்தானோ.

இருங்கள் வருகிறேன். நான் தரும் பரிசைக்கொண்டு போம்
அழகவல்லி தந்தாளென்று கொடுங்கள் ..................
திறவுங்கள் தயிலாவை .................. தூக்குங்கள், உடனே
போய்விடுங்கள் தூ ..................



(வீதி)

### பாட்டு

சிப்பாய்கள்:- எங்களைக் கண்டவள் சிங்கம் போலக் கோபித்
தேசினள் பேசினள்காண் — இதை
என்னென்று மந்திரிக்குன் விதமாக
இயம்புவோம் வாடா தோழா

பங்கப்படுத்திய மங்கை செருக்கினைப்
பார்ப்போம் ஒரு நொடியில் — அந்தப்
பாராளும்மந்திரிக் கேராளமாகப்
பகருவோம் வாடா தோழா

துள்ளி நடந்துநாம் பின்னிதமில்லாமல்
சொல்லுவோம் வாடா தோழா — அந்த
தோன்றலாம் மந்திரிக்கின்றுரைத்தாலவன்
சும்மா விடுவானோடா

## அங்கம் - 8

(அந்திராசி விடுதி)

அந்திராசி:- வாருங்கள், வாருங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனே!...

அழகவல்லியிடம் சென்றீர்களா?

சிப்பாய்:- சென்றோம்

அந்திராசி:- அந்த ஆரணங்கைக் கண்டீர்களா?

சிப்பாய்:- கண்டோம்.

அந்திராசி:- நான் கொடுத்த ரொக்கத்தைக் கொடுத்தீர்களா?

சிப்பாய்:- கொடுத்தோம்.

அந்திராசி:- என்ன சொன்னாள்.

சிப்பாய்:- நல்லாய்ச் சொன்னாள்

அந்திராசி:- அப்படியா? வேறென்ன சொன்னார்கள்.

**சிப்பாய்:-** சொன்னது மட்டுமல்ல — தங்களுக்குப் பரிசு தந்திருக்கிறார்கள்.

**அந்திராசி:-** எனக்கும் பரிசு கொடுத்தாளா. என்னை அவள் பார்த்ததிலிருந்தே கணித்து விட்டேன். அந்த அன்புப் பரிசை எடுங்கள்.

(எடுக்கிறார்கள்)

என்ன இது? — செருப்பு
என்னடா இது — விளக்குமாறு.
டேய். என்னடா சொன்னாள்.

**சிப்பாய்:-** தங்களைப் பற்றி வசை சொன்னாள்.
ஏழை என்றாள்.
தவளை தின்னியென்றாள்.

**அந்திராசி:-** நிறுத்துங்கள்.

விருத்தம்

அட்டகிரியசையினும் துட்டர்படைசருவினும்
அமரரொடு அசுரர்வரினும்
அண்டமுகடிடியினும் கொண்டலிடிபொழியினும்
அந்திராசி அசையவருமோ
கெட்டியிது கெட்டியிது தொக்கிலே விடுவனோ
கேட்டு மவளறியவிலையோ!
கெறுவமதடக்கியவள் உறுதிநிலை குலையவும்
கேடு வினை செய்குவித்தே.

பொட்டெவச் சிறையதனில் இட்டவள் கலங்கிடப்
புவியுளோர் மிக நகைக்கப்
பூதனுயிர் மாழவும் சேதமது பண்ணுவேன்
புங்கவன் தன்னாணையே
திட்டமொடு முத்திரை யெடுத்துமது மார்பினில்
சேரவேதானணிந்து
சென்றிடுந்தீவிரங்கன்றிடாது மனம்
திண்ணமிது திண்ணமிதுவே.



பாட்டு

என்னவசை பேசிவிட்டாளோ - அந்தக்
கன்னியவள்
ஏதுவசை பேசிவிட்டாளோ
என்னவசை சொன்ன அந்தக் கன்னியவளே
கலங்கப்
பின்னிதமில்லாமல் நானும்
சின்னாபின்னமாக்கிடுவேன் (எ)

டேய்! பார்க்கிறேன். அந்தப் பூதனையும் அழகவல்லியையும்,
இந்த விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது.
நீங்கள் போங்கள்.

**சிப்பாய்:-** எங்கள் படி?

**அந்திராசி:-** படி !!! அது அப்புறம்பார்க்கலாம். போங்கடா.

## அங்கம் - 9

(பூதத்தம்பி வீடு)

**அழகவல்லி:-** இந்தாருங்கள் அந்த அந்திராசியின் நட்பைக் கைவிட்டு விடுங்கள். அவன் பொல்லாதவன்.

பாட்டு

**பூதத்தம்பி:-** ஆசைக்கண்மணியெந்தன் அன்பே நீ சொல்வதென்ன
மாசில்லாமணியே என் வஞ்சியேபகருவாயே!

**அழகவல்லி:-** அன்பு நேசரே துயர் யாரிடம் சொல்லிடுவேன்
வம்பனாம் அந்திராசி அவனால் மனது நொந்தேன்.

**பூதத்தம்பி:-** கண்ணே அன்னமே இந்தக் காரியம் என்ன சொல்லு
புண்ணாய்மனது நொந்து புலம்புவதேனின்று.

**அழகவல்லி:-** ஆசையென் மீது கொண்டு — அனுப்பினான்
பொன் எனக்கு
நீசனவனுக்கு நான் — செருப்பு விளக்குமாறனுப்பி
வைத்தேன்.

### விருத்தம்

**பூதத்தம்பி:-** பெண்ணேயென்னமுதேகேளாய் பேதமையானபேர்கள்
மண்ணில் அநேகருண்டு மரியாதையுளோருமுண்டு
திண்ணமாயரசன் வாசல் சென்று நான் திரும்பி
வாறேன்
உண்மைசேருனது கற்புக்கொருகுறைதானு முண்டோ?

(...) அழகவல்லி விசனம் வேண்டாம். உனது கற்புக்கு குறைவு ஒன்றுமில்லையே. அதை மறந்துவிடு. நான் கோட்டைக்குப் போய் வருகிறேன்.

**அழகவல்லி:-** நான் சொல்லியதை மறந்துவிடாதீர்கள். நட்புக்கும் ஒரு எல்லையுண்டு. உம் போய் வாருங்கள்.

## அங்கம் - 10

(கோட்டை)

*அட்மிறல்:-* அமைச்சர்களே! கைதிகளைப் பாதுகாக்க கடலுக்குள்ளே கோட்டை ஒன்று கட்ட வேண்டுமென்று கொழும்பிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அதுவும் ஆறு நாளைக்குள் முடியவேண்டும். பொருத்தமான துறை எதுவென்று சொல்லுங்கள்,

**பூதத்தம்பி:-** ஆம். கொழும்புத்துறை, பருத்தித்துறை, காங்கேசன் துறை .. ......

*அந்திராசி:-* இல்லை, இல்லை ஆறுநாளைக்குள் கட்டி முடிக்க வேண்டுமானால் அதற்குப் பொருத்தமான துறை ஊர்காவற்றுறை.

**அட்மிறல்:-** நல்லது. உடனே வேலையை ஆரம்பிக்க வேண்டும். கச்சாய்த்துறையிலுள்ள கவறுகள் நாளைய தினம் வந்து சேரும்படி செய்தியனுப்புங்கள்.

**அந்திராசி:-** நாமிருவருமே பொறுப்பேற்கிறோம்.

*அட்மிறல்:-* நல்லது ...............



*அந்திராசி:-* பூதரே! மிகவேகமாக நாம் இயங்க வேண்டுமல்லா? கச்சாய்த்துறைக்கு செய்தி அனுப்ப வேண்டும். கடிதத்தை நான் எழுதுகிறேன். உமது கையொப்பத்தை மட்டும்வைத்துவிட்டு கோட்டைக்குச் சென்று படகுகளைத் தயார் செய்யுங்கள் ............ (வெறும் கடதாசியில் பூதத்தம்பி கையொப்பமிடல்)
நன்றி உடனே புறப்படுங்கள்.

### பாட்டு

சிக்கிக் கொண்டானே — கைக்குள்ளே பூதனும்
சிக்கிக் கொண்டானெந்தன் கைககுள்ளே பூதனும்
சீக்கிரமாகவே தூக்குவிப்பேனே (சிக்கி...)

கையொப்பம் வைத்தான் அவனை நான்
பொய்யாய் வஞ்சித்தேன்
கடிதமொன் றுண்டாக்கித் திடமுடனவனை நான்
காவலன் தன்னையே கோபம் பிறப்பிக்க.
(சிக்கி......)

பூதன் மனைவியென்னைத் தீது சொன்னாளோ
பூட்டிவிலங்கினை மாட்டியவளை நான்
பூரணமாய்ச்சிறை தாரணி வைக்கவே
நாட்டியே வாசகம் அங்கம்தீட்டினேன் பாரடா (சிக்)

## அங்கம் - 11

(கோட்டை)

*அட்மிறல்:-* என்ன பதட்டம்? என்ன நடந்து விட்டது?

*அந்திராசி:-* துரை அவர்களே! பூதத்தம்பி போர்த்துக்கீசருக்கு எழுதிய கடிதம் ஒன்றை தந்திரமாக எமது சிப்பாய்கள் எடுத்து வந்திருக்கிறார்கள்.

*அட்மிறல்:-* நீரே படியும்.

*அந்திராசி:-* "பரமபதி துணைசெய்யத் தருமகுணசீலராய்ப் பகரு
நற் கோவையாளும்
பற்றலர்க்கிடியேனும் போர்த்துக்கீசர்
பகர்ந்திடத்திட்டும் கடிதம்
உபமேஷபரிகரியோடுற்ற தேர்காலாட்கள் உன்னியே
கூடிவரவே
உக்கிரப்பீரங்கி துப்பாக்வொள் மழுவொடொரு
மித்துவப்பினுடனே

கரைபெருங்கடல் போலவே கூடியிவ்விடங் கடுகியே
வரவேணும் நீர்
கண்டியாளரசனுங்கனவுதவி பண்ணுவான்
கைப்பற்றிவின் நகரை நாம்
திறமாகவேதந்து திண்ணமாயுமதுபணி செய்திடக்
கருதியுள்ளோம்
சின்னொலாந்தேசு பூதத்தம்பியுடன் சேர்ந்தெழுது
கடிதமிதுவே.

அட்மிறல்:- "வங்கமொடு கொங்கம்கலிங்கம் மராட
மொடுகுடகு கொல்லம்
மலையாள முதலான தேசராசாதிபர்கள் வந்தடி
பணிந்து நிற்பார்
சிங்காரலங்கார அந்தோனி அமிறால்
திருப்பெயரெடுத்துரைத்தால்
திக்கெட்டுமசையுமே மைக்கடல் கலங்குமே
சேடன்முடி நெளியவருமே
அங்கெங்கு மிங்கெங்குமெனதாண்மையறிகுவ
ராகட்டுமாகட்டுமே
அடுத்துக் கெடுக்கவே பூதனுங் கோவைக்
கரியோலை எழுதினானோ

பாடல் – முடுகுநடை

இப்படித் துணிகுவானோ — பூதன் கோவைக்கப்படி
எழுதுவானோ
இப்படித்துணியுமந்தத் தப்பிலிப் பூதனை நானும்
செப்பமாய்ச் சேவகர் விட்டுக் கைப்பிடிய தாய்ப்
பிடித்து
சிறைதனில் வையேனோ கால்கைகள் குறையவே
தறியேனோ
திரண்டே நாய்நரி பருந்தே கழுகுகள்
விருந்தேமிகவுண்ணப் புரிந்தேவிடுகுவன் (இப்)
யாரடா அங்கே .................. உடனே நல்லூருக்குச்
சென்று பூதத்தம்பியைச் சீக்கிரம் கூட்டி வாருங்கள்.

அத்திராசி:- பிரபு இந்தக்கடிதத்தில் தங்கள் தம்பி சின்னொ
லாந்தேசுவும் சேர்ந்திருக்கிறார். பூதத்தம்பி மீதுள்ள
நட்பினால் அவர் அப்படிச் செய்திருக்கலாம். ஊர்



காவற்றுறையில் கோட்டைகட்டும் பொறுப்பை
சின்னொலாந்தேசுவிடம் ஒப்புவித்து அவரை அனுப்பி
விட்டு நாட்டைக் காட்டிக் கொடுக்கத் திட்டம்
தீட்டிய பூதனுக்குத் தண்டனை கொடுத்து விடலாம்.

அட்மிறல்:- உம்... வரட்டும்.

## அங்கம் – 12

(வீதி)

பாட்டு

சிப்பாய்கள்:- நடப்போம் தோழா நல் லூருக்கு
நடப்போம் நகரம் தன்னைக் கடப்போமந்தகனென்ன
மடிப்போம் பூதனைத்தானே — பிடிப்போம்
வேதனை செய்ய (நட...)

பட்டணம் விட்டே நடந்தே செட்டித்தெரு
இட்டமதாகவே இருபேரும் கிட்டினோம்
பாராளும் ராசராம் அட்மிறல் துரை சொன்ன
சீராங்கதைசொல்லி நேராய் அழைத்திட (நட...)

சிலைகள் செய்வோர் தெருவைக் கடந்திட்டோம்
கோலமிகுந்த நல் வேலவன் கோயிலைச்
சிறப்பாகக் கண்டே நாம் முறைப்படி சென்றுமே
திறத்துடனவன் தன்னைக் குறித்துப்பிடித்து வர
(நட...)

தந்திரமாகக் கதை சொல்லி விந்தையாய்
சிந்தை வருந்தி மனம் நொந்திரங்காமல்
தாவியவ்விடம் சென்று கூவியழைத்து நற்
காவலன் முன்பாக மேவிடச் செய்திட (நட...)

## அங்கம் – 13

(கோட்டை)

விருத்தம்

அமிறால்:- என்னடா பூதா நீதானிக் கொடுநினைவு கொண்டு
உன்னிதமாகவே கோவைக்குபாயமாய்ச் சீட்டெழுதி
என்னையே கொல்லுவிக்க இவ்வகைவினைகள்
செய்தாய்

### பாட்டு – முடுகுநடை

அத்தனைக்குங் கெறுவாச்சோ! அடடா பூதா
பித்தனாய் எழுதலாச்சோ,
அத்தனைக்கும் கெறுவாச்சோ மெத்த
துணிவாச்சோ
சித்தமும்துணிந்து தானே இத்தனை செருக்குனக்கு
(அத...)

### விருத்தம்

**பூதத்தம்பி:-** சென்னிமா மகுடம் தாங்கி செங்கோலும் நீதியாக
மன்னவர் மதிக்க நாளும் வலிமை யோடரசு செய்து
பொன்னுறை நகரம் போலப் பூதலமாளும் வேந்தே
மன்னவர் இதென்னமாயம் நானொன்றும்
அறிகிலேனே

### விருத்தம்

**அட்மிறல்:-** செய்ந்நன்றி மறந்திப்போது சீட்டொன்றுவரைந்து
விட்டு
மெல்லதாய்க் கொல்லப்பார்த்தாய் விரை
வினிலென்னையுந்தன்
கையெழுத்துண்டோவன்றோ கவனமாய்ப்
பார்த்தெனக்கு
பொய்யில்லாதுரைப்பாய்யல்லால் போக்கு
வேனுயிரைத் தானே
இதோ இதிலிருக்கும் கையொப்பம் உன்னுடையது
தானே.

**பூதத்தம்பி:-** கையொப்பம் என்னுடையதே. ஆனால் இந்த வாசகத்
தைநானெழுதவில்லைத்துரையே.

**அமிறால்:-** வாசகமில்லாது வெறுமனே கையொப்பமிட்டிருக்கி
றாயா. என்னை ஏமாற்றாதே.

### (பாட்டு)

அடடா துணிவென்னடா கோட்டை பிடிக்க (அட...)
அடடா துணிவென்ன? விடடா மந்திரித்தொழில்
அத்த னைக்கென்னடா தத்துவம் வந்தது (அட ..)



ஆரடாவுனக்கிந்த ஆண்மையைத் தந்தவன்
பாரடா உன்னை நான் பதைத்திட
வதைக்கிறேன் (அட....)

யாரங்கே! .................. இவனைக் கொண்டு போய்ச்
சிறையில் வையுங்கள். நாளை தண்டனை வழங்கப்படும்

**அந்திராசி:-** துரோகம்! ராஜத்துரோகம் நாட்டைக் காட்டிக்
கொடுக்கத் துணிந்தவனை எட்டுத் துண்டாக வெட்டிக்
கொல்ல வேண்டும்.

### பாட்டு

**அட்மிறல்:-** நல்லது மந்திரியே இப்போ
நான் சொல்வதைக் கேளும்
பொல்லாப் பழிசெய்தாலும்
பூதனுயிர் போக்க முறையல்லவே.

**அந்திராசி:-** சொல்கிறேன் அரசே அவன் செய்த
துரோகத்தை நினையாமல்
வல்லமை பேசினதால் நீருமிப்போ
வலிமையுங் கேட்பீரே.

**அட்மிறல்:-** கெட்டவனானாலும் அவன் நம்மைக்
கெடுக்கத் துணிந்தாலும்
வெட்டுந்தர மல்லவே பூதனுயிர்
வீணாகப் போக்கலாமோ?

**அட்மிறல்:-** மந்திரியாரே, கொஞ்சம் பொறும், பூதன் இப்படிச்
செய்ததினால் ஏதும் நடந்துவிடவில்லை. அவன் இந்த
நாட்டின் மரபினன். அவனைப் பதவியிலிருந்து நீக்கி
விடுவோம்.

**அந்திராசி:-** போக்க வேண்டா மென்கிறீர் நானும்
புங்கவன் தன்னாணையே
தாக்கமாய்ச் சேனையுடன் நாளை
சார்ந்திடுவேன் கொழும்பே.

**அந்திராசி:-** அட்மிறல் துரை அவர்களே! உங்களுக்குரிய அதிகாரத்
தைக் குறைக்கப் பார்க்கிறீர்கள். நான் இப்பொழுதே
கொழும்புக்குச் சென்று ஆக வேண்டியதைக் கவனிக்
கிறேன்.

அட்சிறல்:- கொழும்புநீ செல்லவேண்டாம் பழிபாவம்
கொண்டதுமுன் மேலே
எழுந்திடா தென்மேலே அப்பால்கொண்
டேகியே வெட்டுவிப்பாய்.

அட்சிறல்:- நில்லும். அவனைக் கொலை செய்விக்க எனக்கு
விருப்பமில்லை. தண்டனை வழங்குவதை நீரே
ஏற்றுக் கொள்ளும்.

## பூதத்தம்பி - பாட்டு

பல்லவி

ஐயோ! இதுபெருஞ் சதியே இந்த
அவதிப்படவோ வைத்தாய்
தலையினில் விதி (ஐயோ......)

அனுபல்லவி

மைவிழி மாதுமை யாளொரு பாகா
வாசா கயிலை நடராசா விஸ்வேசா
(ஐயோ......)

சரணம்

தீமை எவர்க்கு நான் செய்தேனோ ஒன்று
செய்யவெனது மனந்தனில் நினைந்தேனோ
ஏதுமொருவர்க்கு நான் செய்தது மில்லை
ஏழைக்கிதுவோ துன்பம் எய்திடு மெல்லை.
(ஐயோ......)

## அங்கம் - 14

(சிறைக்கூடம்)

விருத்தம்

அழகவல்லி:- ஐயனே அரசனுக்கு அருமைசேர் முதன்மையான
துய்யனே அமைச்சனேயென் துணைவனைக் கொல்ல
வேண்டாம்
மெய்யதாய்க் கோடிபொன்னும் விளங்கவே கட்டித்
தாறேன்
ஐயகோ பதறுதையோ ஆதரிப்பீர் புண்ணியவானே



பாட்டு

அந்திராசி;- காத்தருளச் சொல்லிக் காலினில் வீழ்ந்துமே
கத்துவதென்னடி கள்ளி
காலன் வந்தால் பணம்
காக்குமோ சொல்லடி கள்ளி

அழகவல்லி:- கள்ளியென்றே என்னை இங்கு
தள்ளிப் பேச வேண்டாமையா
உள்ளபடி நாமே இங்கு
உமக்கடிமையாவோமையா

அந்திராசி:- அடிமையாவேனென்று சொல்லி
அதட்ட வேண்டாமடி
ஆனபொருளை யென்தன்
காலிலே போடடி

அழகவல்லி:- போடி யென்று சொல்ல வேண்டாம்

லட்சம் பொன்னும் தாறேனையா
வாடிமனம் நொந்துவந்தேன்
வாழ வழி காட்டுமையா

அந்திராசி:- அப்போது நானனுப்பியபொன்னிலும் கூடவோ

அதை அடிமைக்காரப்பயல் — எவனுக்காயினும்
அவன் காலடியில் போடடி சிறுக்கி.

விருத்தம்

என்னடி சும்மா நின்று இதம் பேசிமருட்டுகின்றாய்
முன்னமேமுசுட்டை கொவ்வை முதலியபதார்த்தம்
தின்று
இந்நேரம் முதன்மைபெற்றான் இன்னானென்றறி
கிலாயோ
நன்னயம் பேசவேண்டாம் நடந்திடாய் நடத்திடாயே
அழகவல்லி போனது போகட்டும், இப்பொழுதாவது......

அழகவல்லி;- கிட்டவராதே! எட்டி நில், துரோகி.

அந்திராசி:- யாரடா!...... இவளையும் கொண்டு போய்ச் சிறையில்
வையடா.

## அழகவல்லி - பாட்டு

பல்லவி

போக விதி வசமோ — எங்களை விட்டுப்
போக விதி வசமோ. (போக......)

அனுபல்லவி

போக விதி வசமோ ஆகம்பதறுதையோ
புலையன் அந்திராசி நம்மை
அலையவே இதைச் செய்தான். (போக......)

சரணம்

விருந்துக் கழைத்ததனால் அவனென்னைக் கண்டு
புரிந்த செயலிதுவோ?
இருந்துநாம் என்ன செய்வோம்
வருந்துதே எந்தன் அங்கம்
ஏழைகளை விட்டு நீரும்
மாள விதி வசமோ. (போக......)

*அந்திராசி:-* சூரா! வீரா!

சிறையிலிருக்கும் பூதனைக் கொண்டுபோங்கள். அதோ தெரியுதே தூக்குமரக்காடு. அங்கே வைத்து வெட்டிக் கொலை செய்து விடுங்கள். விரைவிலே காரியத்தை முடித்து விட்டு உங்கள் சன்மானத்தை வாங்கிக் கொண்டு போங்கள்.

*சிப்பாய்கள்:-* அப்படியே செய்கிறோம்.



## அங்கம் - 15

காட்டு வழி

(பூதத்தம்பியின் கண்களைக் கட்டிக்கூட்டிப் போதல்)

மரணதண்டனை விதிக்கப்பட்ட பூதத்தம்பி வருந்திப் பாடுதல்

பாட்டு

புவிநாயகனார் முதவி மகிழ்வினொடு பெற்ற
புதல்வனென்பதற் கழுவனோ
பூலோக மந்திரித் தொழிலெனக்கேவந்த
புதுமையை நினைத்தழுவனோ
கவிவாணர்புகழ் இரணசிங்கர் என் மாமனைக்
கருத்தினில் நினைந்தழுவனோ
காதல்சேர் எனது மனைவி மைந்தனைத் தங்கையின்
கவலையை நினைந்தழுவனோ
சிவசிவா சின்னொலாந் தேசுவென் தோழனைச்
சிந்தையில் நினைந்தழுவனோ
திக்கெலாம் புகழ்பெறும் மைத்துனர்க் கிதுவகை
தெரியாததற் கழுவனோ
அவனிதனில் இக்கொடிய தீமையே எந்தனுக் கானதை
நினைந்தழுவனோ
ஐயனே ஈராறு கையனே நல்லைவாழ்
ஆறுமா முக வேலனே.

## அங்கம் - 16

(சிறைக்கூடம்)

*அந்திராசி:-* காரியத்தை முடித்து விட்டீர்களா.?

*கொலைஞர்:-* முடித்து விட்டோம் ஐயா

*அந்திராசி:-* சபாஸ், சிறையிலிருக்கும் அழகவல்லியை வெளியில் விட்டு விடுங்கள். எங்காவது போகட்டும்.

*குரல்:-* பூதன் கொலை செய்யப்பட்டு விட்டான். எட்டுத் துண்டாக வெட்டப்பட்டு விட்டான்.

*அழகவல்லி:-* ஆ ஐயா! என் மன்னவர் கொலை செய்யப்பட்டு விட்டாரா! ஐயோ!

### அகவல்

பொன்னுறையும் மேனியனே போர்வேந்தர்
பொக்கிஷமே

சிந்தை கலங்க வைத்துச் சென்றனையோ ஐயா நீ
எந்தையா மீசன் இப்படியோ ஆக்கவிட்டான்
இந்தத்துரோகமதை ஏன் செய்தான் அந்நியனாம்
அந்திராசி தன்னை ஆனை அடியாதோ
ஆனை அடியாதோ, அலியன்தான் தீண்டாதோ

### வாழ்த்து

கங்கையை அணிந்தாய் போற்றி
கண்மூன்று உடையாய் போற்றி
அங்கி கைக் கொண்டாய் போற்றி
ஆனையை உரித்தாய் போற்றி
சங்கரா போற்றி போற்றி
தாயுமை பாகா போற்றி
எங்களைக் காப்பாய் போற்றி
எந்தையே போற்றி போற்றி



# திருமதி இரத்தினம் வைரமுத்து அம்மையார்

வடஇலங்கையில் வடமராட்சிப் பிரதேசம் மிகச்சிறந்த கலைஞர்களையும், கவிஞர்களையும், தமிழ் அறிஞர்களையும் தந்த பெருமைக்குரியது. இப்பிரதேசத்தில் அல்வாய் என்னும் கிராமத்தில் மாறாம்புலம் எனும் குக்கிராமம் ஒன்றுண்டு. இங்கே ஒரு விநாயகர் கோயில் நீண்டகாலமாக உள்ளது. இது மூர்த்திகரமான கோயிலாகும். இக்கோயில் வீதியில் அடிக்கடி இசைநாடகங்கள் இடம்பெறுவது வழக்கம். இந்த இசைநாடகங்களைப் பெரும்பாலும் மேடையேற்றியவர் 1940 பதுகளில் அண்ணாவியார் பொ. சின்னையா என்பவர்.

அண்ணாவியார் சின்னையா ஓர் இசைநாடகப்பரம்பரையைச் சேர்ந்தவர். இவருடைய தந்தையார் குருக்கட்டுப் பொன்னரும், சிறிய தந்தையார் சிதம்பரியும் ஒப்புயர்வற்ற உயர்ந்த கலைஞர்கள். இக்கலைக்குடும்பத்தில் அண்ணாவியார் சின்னையாவுக்கும், பொன்னம்மா என்பவருக்கும் மூத்தமகளாகப் பிறந்தவர் தான் இரத்தினம் அம்மையார்.

இரத்தினம் அம்மையார் 1928 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி பிறந்தார். சிறுவயதிலேயே சுறுசுறுப்பும் இசைஞானமும் மிக்கவராகத் திகழ்ந்த இவர் ஆரம்பக் கல்வியை கரவெட்டி தேவரையாளி சைவ வித்தியாசாலையில் பெற்றார்.

சூரன் என்னும் சைவப்பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் சைவமும், தமிழும் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. அக்காலத்தில் புகழ்பூத்த ஆசிரியர்கள் பலர் இங்கே கல்வி

கற்பித்தனர். அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா, சைவப்புலவர் சி. வல்லிபுரம், ஆசிரியதிலகம் க. முருகேசு, ஆசிரியமணி ஆ. ம. செல்லத்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேற்படி ஆசிரியர்களிடம் இரத்தினம் அம்மையார் அவர்கள் கல்விபயின்றார்.

பாடசாலை நிகழ்ச்சிகளின்போது தேவாரம், திருவாசகம் என்பனவற்றை அழகாக ஓதும் ஒருவராக இவர் அக்காலத்தில் விளங்கினார். பாடசாலையில் நடைபெறும் நாடகங்களிலும் இவர் நடித்துப் புகழ்பெற்றார். தந்தையார் ஒருசமயம் மேடையேற்றிய 'வள்ளிதிருமணம்' நாடகத்தில் நாரதர் பாத்திரத்தை ஏற்றுப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

அண்ணாவி சின்னையாவுடைய வள்ளிதிருமண நாடகத்தால் கவரப்பட்ட இளைஞர்தான் பிற்காலத்தில் பேரும்புகழும் பெற்ற நடிகமணி வி. வி. வைரமுத்து.

வைரமுத்து ஏற்கெனவே இசைநாடகங்களில் நடிக்கவும், கலை நிகழ்ச்சிகளில் ஆர்மோனியம் வாசிக்கவும் ஆரம்பித்துவிட்டார். இக்கலைத்தொடர்புதான் பின்னர் வைரமுத்துவுக்கும் - இரத்தினம் அம்மையாருக்கும் திருமணம் நடைபெறக் காரணமாயிற்று.

வைரமுத்துவின் வளர்ப்புத்தந்தையார் ஆசிரிய திலகம் க. முருகேசு அவர்களின் ஆசீர்வாதத்துடன் இவர்களுடைய திருமணம் 1944 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி அல்வாயில் இடம்பெற்றது.

வைரமுத்து இரத்தினம் தம்பதியர் மிகச் சிறப்பாக இல்லறம் பேணியதோடு கலைவளர்ச்சியிலும் ஈடுபாடு கொண்டு விளங்கினர். வைரமுத்து மாபெரும் கலைஞராகப் பிற்காலத்தில் விளங்கியமைக்கு திருமதி இரத்தினம் அம்மையாரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் முக்கியமானவை என்பதைச் சொல்லாமலிருக்க முடியாது. ''ஒவ்வொரு ஆடவனின்வெற்றிக்குப் பின்னால் ஒருபெண் இருப்பாள்'' எனும் ஆங்கிலப் பழமொழிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் திருமதி இரத்தினம் அம்மையார் அவர்கள்.

திரு. திருமதி வைரமுத்து தம்பதியரின் இல்லற தர்மத்தின் பயனாக ஆறு குழந்தைகள் பிறந்தனர். வஸந்தா, லலிதா, வனிதா, ஜெயந்தா, சாரங்கன், மணிமேகலா ஆகிய ஆறு பிள்ளைகள். கலைத்துறையில் ஈடுபாடுடையவர்கள். தந்தையாருடன் இணைந்து நாடகங்களில் நடித்தவர்கள். வஸந்தா, வனிதா, ஜெயந்தா ஆகிய மூவரைத்தவிர ஏனைய மூவரும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று, நல்லதொழில் வாய்ப்புப் பெற்று விளங்குகின்றார்கள்.



ஆறு பிள்ளைகளுக்குப் பெற்றோரான வைரமுத்து தம்பதியருக்கு பதினேழு பேரப்பிள்ளைகளும் எட்டு பீட்டப்பிள்ளைகளும் உள்ளனர்.

திருமதி இரத்தினம் அம்மையார் அவர்கள் மிகவும் சிறந்த சமய பக்தர். நல்லதோர் பண்பாளர். இனசனங்களைப் பேணுவதிலும் உதவி செய்வதிலும் ஆர்வமுடையவர்.

சகோதர பாசம் மிக்க இவர் தன்னுடன் கூடப்பிறந்த சகோதரர்களிடத்திலும், அவர்களுடைய பிள்ளைகளிடத்திலும், பேரப்பிள்ளைகளிடத்திலும், அன்பும் அக்கறையுமுடையவர். குடும்ப நிர்வாகத்திலும் சிறப்பு மிக்கவர். அத்துடன் இரத்தினம் அம்மையார் அவர்கள் நன்றிமறவாத பண்புமிக்கவர்.

யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்கும் போக்குவரத்து நடைபெறாத ஒரு காலகட்டத்தில் இவர் கடும் நோய்வாய்ப்பட்டிருந்தார். வைத்தியர்கள் அது, கான்சர் நோயாக இருக்கலாமென்றும் உடனடியாக கொழும்புக்குச் சென்று வைத்தியம் செய்யாதுவிட்டால் ஆபத்து நேரலாம் என்றும் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர். இக்காலகட்டத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பியும், கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையும் பெருமுயற்சி எடுத்து, விசேட அனுமதி பெற்று, மகரகமவுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பெற்ற திருமதி இரத்தினம் அம்மையார் அவர்கள், பத்தாண்டுகளுக்கு மேலாக மிகவும் சுகதேகியாக வாழ்ந்தார். இதனை இவர் அடிக்கடி கூறி, உதவியவர்களைப் போற்றுவதுண்டு. இறப்பதற்கு இரண்டொரு நாள்கள் முன்னரும் இச்செய்தியைக் கூறியமை குறிப்பிடத்தக்கது.

இறைபதமடைவதற்கு இரண்டொரு மாதங்கள் முன்னதாகத் தன்னுடைய உறவினர்கள் சிலரை, அவர் சென்று குசலம் விசாரித்து வந்துள்ளார். குறிப்பாகத் தன்னுடைய மாமனாரை - அதாவது தன்னுடைய கணவரின் வளர்ப்புத் தந்தையாகிய 90 வயது நிரம்பிய ஆசிரிய திலகம் முருகேசனாரைச் சென்று சந்தித்து அளவளாவியதை மகிழ்ச்சியோடும் ஆத்ம திருப்தியோடும் சொல்லி மகிழ்ந்திருக்கின்றார்.

மணம் முடித்த காலத்திலிருந்து காங்கேசன்துறையில் வாழ்ந்து வந்த அம்மையாரவர்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 1990 ஆம் ஆண்டிலிருந்து மல்லாகம், சுன்னாகம், மட்டுவில், அரியாலை, உடுவில் என அடிக்கடி இடம்பெயர்ந்து மாறி, மாறி

வாழ்ந்த போதும் மனந்தளரவில்லை. எப்போதாவது தன்னுடைய வாழ்விடமுள்ள காங்கேசன்துறைக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்தார். ஆனால் துரதிஷ்டவசமாக அது நிகழவில்லை. அவருடைய வாழ்வு நிறைவெய்திவிட்டது.

இவருடைய இசை ஈடுபாடுபற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மரணம்டைவதற்கு இரண்டொரு நிமிடம் முன்னதாகவும் நாடகப்பாடலொன்றைப் பாடிய பின்னரே உயிர்நீத்தார் என்றால் அவருடைய இரத்தத்தில் ஒன்று கலந்துவிட்ட இசை ஞானத்தை என்னென்பது. இத்தகைய ஒருவர் நடிகமணியின் துணைவியாக இருந்தாரென்றால் வைரமுத்து கலையுலகில் பிரகாசிக்காமலிருக்க முடியுமா?

இத்தகு சிறப்புமிக்க அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

# வமிசாவளி

குருக்கட்டுப்பொன்னர் + சிவகாமி

சின்னையா + பொன்னம்மா

இரத்தினம் + வைரமுத்து

கனகரத்தினம் + குருநாதன்

இராசமணி + சின்னத்துரை

தவமணி + மகேஸ்வரி

மாசிலாமணி + பூமேஸ்வரி

அஷ்வத்தம்மா + மார்க்கண்டு

பாவநாசசிவம் + ஜூலியா

பாலசறோஜா + கந்தசாமி

மல்லிகாதேவி + தங்கத்துரை

வஸந்தா + ஐயாத்துரை

செல்வகுமார் + நிர்மலாதேவி

ராஜ்குமார்
வசந்தகுமார்
அமுதா
பபிதா

லலிதா + நவரத்தினம்

விஜிதா + ஜீவானந்தம்

* தனுஷன்
* பானுஜன்
* கோபிஷா

சுகிதா + வரதன்

* அபிரதன்
* சுபாங்கி

கவிதா + குகன்

யசோதா + லூயிஸ்

ஜெகதா + பாபு

* ஜெனிபர்
* நரேன்

வனிதா

ஜெயந்தா + தவராஜா

பிரதாபன்
ஜெயவாணன்

சாரங்கன் + சுமதி

நீலாம்பரன்
பிரவீன்
ஜனார்த்தன்

மணிமேகலா + ரவீந்திரா

அஜெந்
சிந்துஜா
சாருஜன்

* பீட்டப்பிள்ளைகள்